www.Padasalai.Net www.TrbTnpsc.com

அரையாண்டுத் தேர்வு - 2023

தமிழ் தேர்வுஎண்

காலம்: 3.00 மணி மதிப்பெண்கள்:100

குறிப்பு :I) அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்

I)சரியான விடையைத் தேர்ந்தெடு. 15×15=15

1.காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள் இத்தாடரில் அடிக்கோட்ட பகுதி குப்பிடுது............ அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

2.எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்திலின் மிஞ்சுவதைக் குறிக்கும் சரியான சொல்
அ) எள்கசடு ஆ) பிண்ணாக்கு இ) ஆமணக்கு ஈ) எள்கட்டி

3.இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர்
அ)தமிழழகனார் ஆ)அப்பாத்துரையார் இ)தேவநேயப் பாவாணர் ஈ)இரா.இளங்குமரனார்

4.எந்தமிழ்நா என்பதைப் பிரித்தாமல் இவ்வாறு வரும்__ அ) எந்+தமிழ்+நா
ஆ)எந்த+தமிழ் +நா இ)எம்+தமிழ் +நா ஈ) எந்தம்+தமிழ்+நா

5."பெரிய மீசை" சிரித்தார் -வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
அ)பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) உண்மத்தொகை

6.காலம் கர்ந்த பெயரெச்சமே
அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) வினைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

7.சிவப்புச்சட்டை பேசினார் - அடிக்கொடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை யாவை ? அ) அன்மொழித்தொகை ஆ)உவமைத்தொகை இ) பண்புத்தொகை ஈ) உம்மைத்தொகை

8."சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது____
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

9."இவள் தலையில் எழுதியதோ
கற்காலம்தான் எப்போதும் ....."-இவ்வடிகளில் கற்காலம் என்பது
அ ) தலைவிதி ஆ) பழைய காலம் இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

10.சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

11.வினா...........வகைப்படும்.
அ) 6 ஆ) 8 இ) 10 ஈ) 4

பாடலைப்படித்துப பின்வரும் வினாக்களுக்கு(12,13,14,15) விடை தருக.

"அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று."

12.பாடல் இடம்பெற்ற நூல்___
அ) நீதிவெண்பா ஆ) புறநானூறு இ) வெற்றி வேற்கை ஈ ) கொன்றை வேந்தன்

13.பாடலின் சீர் மோனைச் சொற்கள்____
அ) அருளை, அருத்துவதும் ஆ) அருளை, அறிவை இ) அகற்றி,அருந்துணையாய் ஈ) அறிவை,அகற்றி

14.அருந்துணையாய்-இச்சொல்லைச் பிரித்தால்
அ) அருந்துணை+யாய் ஆ) அருந்து+துணையாய் இ) அருமை+துணையாய் ஈ) அரு+ துணையாய்

15.'குண்டலமும் குழைகாதும்" இலக்கணக்குறிப்பு தருக.
அ) எண்ணும்மை ஆ) உம்மைத்தொகை இ) பண்புத்தொகை ஈ) அடுக்குத்தொடர்

II) எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் வினா எண் **21 —க்கு கட்டாயமாக விடையளிக்கவுமா.**

16. வசன கவிதை — குறிப்பு வரைக. 4×2=8

17.விடைகளுக்கு ஏற்ற வினாக்கள் அமைக்க.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

அ) சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக ம.பொ.சி இலக்கிய அறிவு பெற்றார்.
ஆ) அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன.
18. குறிப்பு வரைக — அவையம்.
19.தீவக அணியை விளக்கி, அதன் வகைகளை எழுதுக.
20.தீவக அணியின் வகைகள் யாவை?
21.விடல் ....... என்த் தொடங்கும் குறளை எழுதுக.
**III) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
22.ஒலித்து —- பகுபத உறுப்பிலக்கணம் தருக. 5×2=10
23.சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக.
அ) வருந்தாமரை ஆ) பிண்ணாக்கு
24.பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.
அ) வரப் போகிறேன் ஆ) முன்னுக்குப் பின்

25.தொடர்ளில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.
அ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.
ஆ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தருக.
26.ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக. அ) திருநெல்வேலி ஆ) கோயம்புத்தூர்.
27.கலைச்சொல் தருக. அ)storm ஆ) patent
28.தமிகழெண்களாக எழுதுக. அ)70 ஆ )99
**IV.எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.**
29.ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக. 2×3=6
30."புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது".
–இது போல் இளம் பயிர் வகை மூன்றின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
31.கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.
சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத்
திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன.சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தருக ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்கு தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணைசெய்கின்ற.
அ) பழந்தமிழ் மக்களின் எந்தெந்த எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணைசெய்கின்றன?
ஆ) நிகழ்கலைகளின் பயன்கள் இரண்டினை எழுதுக.
இ) நிகழ்கலைகள் எப்பகுதி மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகத் திகழ்கின்றன?
**V.எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. வனா எண் - 34_க்கு கட்டாயமாக விடையளிக்கவு.**
32.தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விவரி. 2×3=6
33.'சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது' - இடஞ்சுட்டிப் பொருள் தருக.
34.'அன்னை மொழியே,' எனத் தொடங்கி 'பேரரசே' என முடியும் "அன்னை மொழியே"
பாடல். (அல்லது)
"தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்
**VI.எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.**
35.மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் 2×3=6
தருக.
36.'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'- இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?
37."உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்

கல்லார் அறிவிலா தார்" - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

**VII.**அனைத்து வினாக்களுக்கு விடையளி. 5×5=25

38."மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக. . (அல்லது)

முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

39.மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

(அல்லது)

நாளிதழ் ஒன்றில் பொங்கல் மலரில் "உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்" என்ற உங்கள் கட்டுரையை வெளியிட ,அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40.நயம் பாராட்டுக.

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்;
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்;
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ? — பாரதியார்

41. வீட்டு எண் 30, பூங்கா தெரு, திருச்சி என்ற முகவரியைச் சேர்ந்த க.அழகுமலையின் மகள் அ.விமலா என்பவர் மாவட்ட மைய நூலகத்தில் உறுப்பினராகச் சேரவிருக்கிறார்.

42.காட்சியைகண்டு கவினு எழுதுக. (அல்லது)

மொழிபெயர்க்க.

அ) Education is what ramains after one has
forgotten what one has learned in school
— Albert Einstein

ஆ) Tomorrow is often the busiest day of the
Week
— Spanish Proverb

**VIII)** அனைத்து வினாக்களுக்கு விரிவாக விடையளிக்கவும். 3×8=24

43.'சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே'என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

(அல்லது)

கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் புக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

44.அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின்,செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

(அல்லது)

தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

45."விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்"

(அல்லது )

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதித் தலைப்பிக.
குறிப்புகள்: முன்னுரை - சாலைப் பாதுகாப்பு உயிர்ப் பாதுகாப்பு - சாலை விதிகள் - ஊர்தி
ஓட்டுநக்கான நெறிகள் - விபத்துகளைத் தவிர்ப்போம் விழிப்புணர்வுக் தருவோம்-முடிவுரை

.......................................................................................................................................

நூலக உறுப்பினர் படிவம்
____________ மாவட்ட நூலக ஆணைக்குழு
மைய/கிளை/ஊர்ப்புற நூலகம்_____________________________
உறுப்பினர் சேர்க்கை அட்டை உறுப்பினர் என்
அட்டைஎண்
1.பெயர் :
2.தந்தை பெரியர் :
3.பிறந்த நாள் :
4.வயது :
5.படிப்பு :
6.தொலைபேசிஎணா:
7.முகவரி :
(அஞ்சல் குறியீட்டு எண்)
நான்_____________நூலகத்தில் உறுப்பினராகப் பதிவுசெய்ய இத்துடன் ரூ_____/– சந்தா
தொகை நூ______/- ஆக மொத்தம் ரூ____/- ரொக்கமாகச் செலுத்துகிறேன் நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.
இடம் : தங்கள் உண்மையுள்ள,
நாள் :
திரு/திருமதி/செல்வி/செல்வன்/________________அவர்களை ,எனக்குத் தெரியும் எனச்
சான்று அளிக்கிறேன்.

www.Padasalai.Net